# உயிரோவியம்

உயிர் உள்ளவற்றால் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய கட்டமைப்பு எது எனக் கேட்டால் அது மனிதனால் உருவாக்கப்பட்டதாகத்தான் இருக்கும் என நீங்கள் நினைப்பது இயல்புதான்.அந்த வகையில் உங்கள் பதில் சீனப் பெருஞ்சுவர், எகிப்து பிரமிடுகள், அங்கோர்வாட் கோயில் அல்லது துபாய் புஜ் கோபுரம் என ஏதாவது ஒன்றாக இருக்கும். ஊம் ஹீம்... இவை எதுவும் இல்லை.

உண்மையில் அத்தகு மாபெரும் கட்டமைப்பு பவள உயிர்க (Coral)ளால் உருவாக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலியாவில் உள்ள கிரேட் பேரியர் ரீஃப் தான். தமிழில் பெரும் தடுப்பு பவளப் பாறைத்திட்டு என்று இதை அழைக்கலாம்.




Great Barrier Reef
Map area
AUSTRALIA
Sydney
Great Barrier Reef
Cairns
Great Barrier Reef Marine Park boundary
AUSTRALIA
Mackay
Coral Sea
200 km
200 miles
Gladstone

பூமியின் சுற்றுப்பாதையில விண்வெளியில் இருந்து பார்த்தால் பூமியில் தெரியும் ஒரே கட்டமைப்பு இந்த பெருந்தடுப்பு பவளத்திட்டுக் கூட்டம் மட்டுமே. ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து கடற்கரையை ஒட்டி 2600 கிலோ மீட்டருக்கு நீண்டும் கிட்டத்தட்ட 3,50,000 சதுர கிலோ மீட்டருக்கு பரந்தும் காணப்படுகிறது இந்த கிரேட் பேரியர் ரீஃப். இதில் 70 உயிரியல் மண்டலங்கள் (biological zones) அடங்கியுள்ளன.

இந்த பவளத்திட்டு 2,900 பவளத் திட்டுகளாலும் 600-க்கும் மேற்பட்ட தீவுகளாலும் ஆனது. கோரல் எனப்படும் பவளங்கள் உண்மையில் விலங்கு, தாவரம் ஆகிய இரண்டின் கூட்டு வாழ்க்கையில் உருவாகுபவை. இத்திட்டுகளின் உருவாக்கம் பல லட்சம் ஆண்டுகளை உள்ளடக்கியது.

சொல்லிக்கொள்ளக்கூடிய வகையில் உணவுச் சத்துகள் ஏதும் பவளத்திட்டு பகுதியில் இல்லை எனினும் கடலில் வாழும் மீன்களில் மூன்றில் ஒரு பங்கு பவளத் திட்டுகளில் தான் வாழ்கின்றன. 1,500 மீன் வகைகளும் 5,000-க்கும் மேற்பட்ட மெல்லுடலிகளும் இந்த பெருந்தடுப்பு பவளத் திட்டுகளில் வாழ்கின்றன. இவையன்றி திமில் முதுகு திமிங்கிலங்கள், ஆவுளியா பேராமை போன்ற அழிந்துவரும் உயிரினங்களுக்கும் இது அன்னை மடியாகத் திகழ்கிறது. மேலும் 150க்கும் மேற்பட்ட பறவையினங்கள் இப்பகுதியில் வாழ்கின்றன.

கிரேட் பேரியர் ரீஃப் மிகச்சிறந்த சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. இதன் பல்லுயிரிய வளமும், இதனை ஸ்கூபா போன்ற சாதனங்களின் உதவியோடு கடலில் நீந்திச் சென்று காணபதற்கு உள்ள வசதியும் மிகப்பெரிய சுற்றுலா ஈர்ப்பு மையமாக இப்பகுதியை மாற்றி உள்ளன. குறிப்பாக ஸ்கூபா நீச்சல் மூலம் கடலுக்கடியில் நீந்திச் சென்று பவள உயிர்களையும், பல வண்ண மீன்களையும் காண இங்கு ஏராளமாக



சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இதில் வொயிட்சண்டே, கெய்ன்ஸ் போன்ற நகர கடற்கரைகள் முன்னணி வகிக்கின்றன. கிரேட் பேரியர் ரீஃப் சுற்றுலா மூலம் ஆஸ்திரேலிய அரசுக்கு ஆண்டுதோறும் 5 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர் வருவாய் கிடைக்கிறது.

உலகின் ஏழு இயற்கை அதிசயங்களில் ஒன்றாக இந்த கிரேட் பேரியர் ரீஃப் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நீண்ட கடற் கரையை ஒட்டி பளிங்கு போன்ற தெளிந்த நீரின் அடியில், பல கோடி உயிரினங்களால் உருவாக்கப்பட்ட உயிர் ஓவியம் இந்த பவளத் திட்டு. இத்தகு அற்புதமான இயற்கை வாழ்விடம் பல காரணங்களால் சிதைந்துவருகிறது.

உலக வெப்பநிலை உயர்வால் கடலுக்கு









மேல் ஏற்பட்டு வரும் ஆபத்தான மாற்றங்களை மட்டுமே நாம் பெரிதும் கவனித்து வருகிறோம்.

உண்மையில் மிக மோசமான விளைவுகள் பூமி சூடாவதால் கடலுக்கடியில்தான் நிகழ்ந்து வருகின்றன. அந்த விளைவுகளால் அதிகம் சிதைந்து வருவது இந்த கிரேட் பேரியர் ரீஃப்தான். இதை உணர்ந்து யுனெஸ்கோ நிறுவனம் இதை உலகின் பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக அறிவித்துள்ளது. இதன் மூலம் யுனெஸ்கோ இதைப்பாதுகாக்கும் கடமையை உணர வைத்துள்ளது.

இந்த பவளத்திட்டு பரவியுள்ள பகுதி முழுவதும் "பரும் தடுப்பு பவளத் திட்டு கடல்சார் பூங்கா' (Great Barrier Reef Marine Park) என்று அறிவிக்கப்பட்டு தற்போது பாதுகாக்கப்பட்டு வருகிறது.